Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ்
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal
ISSN: 3049-0723 (Online)

Volume 1, No. 07, April 2025

# The Virunthombal Athikaram of Thirukkural and the infallibility condition of Karaikal Ammaiyar

**BARATHE. S[1], Prof. S. RAVI[2],**

1. Ph.D. Research Scholar, Central University of Tamil Nadu, Thiruvarur.
2. Research Supervisor, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur.

**ABSTRACT**

In ancient Tamil society, the practice of hospitality, welcoming guests, was deeply ingrained in their cultural structure. Hospitality was regarded as a very important virtue and a marker of a moral life. The timeless ethical text, Thirukkural, fully expresses the significance of welcoming guests. The purpose of this article is to illustrate how Karaikal Ammaiyar, revered in the Tamil Shaiva tradition, lived a noble family life, consistently adhering to the principles of hospitality."

**ARTICLE INFO**

Received : 20 March 2025
Revised : 30 March 2025
Accepted : 01 April 2025

**KEYWORDS**

Hospitality, Innovation, Care, Medicine, Glow of Happiness, Punidhavathi, Domestic Life

# திருக்குறளின் விருந்தோம்பல் அதிகாரமும் காரைக்காலம்மையாரின் வழுவா நிலையும்

**பாரதி. சா[1], பேரா. ச. இரவி[2],**

1. **முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர். 610 005**
2. **நெறியாளர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர். 610 005**

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைய தமிழ்ச் சமூகத்தின் கலாச்சார கட்டமைப்பில் விருந்தினர்களை வரவேற்கும் விருந்தோம்பல் என்ற முறைமை ஆழமாக வேரூன்றிய ஒன்றாகும். மிக முக்கியமான நற்பண்பாகவும், ஒழுக்கமான வாழ்க்கையின் அடையாளமாகவும் விருந்தோம்பல் கருதப்பட்டு வருகிறது. காலத்தால் அழியாத அறநெறி நூலான திருக்குறள், விருந்தினர்களை வரவேற்பதன் முக்கியத்துவத்தை முழுத்திறத்துடன் எடுத்துரைக்கிறது. தமிழ் சைவ மரபில் போற்றப்படும் காரைக்கால் அம்மையார், இல்லறமாகிய நல்லற வாழ்வில் பெருமைமிகு ஒழுகலாறான விருந்தோம்பல் நெறியில் சற்றும் வழுவாது நின்றதனை உணர்த்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திறவுச் சொற்கள்

விருந்து, புதுமை, ஓம்பல், மருந்து, முகமலர்ச்சி, புனிதவதி, இல்லறம்

## முன்னுரை

அமிழ்தாகிய தமிழ் மொழியில் அறம், பொருள், இன்பம் எனும் பேரொளியைக் கொண்டு, உலக மனங்களின் இருளைப் போக்கும் வாழ்வியல் அகராதியாக திருக்குறள் திகழ்கிறது. இதன் 133 அதிகாரங்கள் இவ்வுலக மக்களின் மனங்களைக் கொள்ளை கொண்டு அதிகாரம் செய்துவருகின்றன. எல்லா மக்களாலும் ஏற்கக்கூடிய அறிவுக்கடல் போன்ற திறத்தால் திருக்குறள் உலகப் பொதுமறை என அழைக்கப்படுகிறது. ‘மறை’ என்னும் சொல்லுக்கு ‘மறைத்து வைத்தல்’ என்று பொருள். திருக்குறள் நூல் மறைந்திருக்கும் அரிய பொருட்களை மனித வாழ்விற்குக் கூறும் நூலாதலின் இதற்கு உலகப் பொதுமறை எனப் பெயர்கொள்வது ஏகப்பொருத்தமாகும்.

தமிழ்ச் சமூகத்தின் தனித்ததொரு பண்பாட்டு நெறியாக விருந்தோம்பல் பண்பு இருந்து வருகிறது. ‘விருந்து’ என்ற சொல்லுக்கு ‘புதுமை’ என்று பொருள். ‘ஓம்புதல்’ என்ற சொல்லுக்குப் பாதுகாத்தல் என்று பொருள். விருந்தோம்பல் என்பது விருந்தினரைப் பாதுகாத்தலாகும். பல புதிய மனித உறவுகளை மேம்படுத்திட மனித உயிர்களுக்குக் கிடைத்த மகத்தான பண்பாற்று முறை விருந்தோம்பல் எனலாம். இல்லம் தேடிவரும் ஒவ்வொரு உறவினர்களையும், நண்பர்களையும் இன்முகத்தோடு வரவேற்று விருந்தளித்து மகிழ்வது தலையாயதென திருக்குறள் பகர்கிறது. விருந்தோம்பல் எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் உரைத்த கருத்துக்களின்படி அறுபத்து மூன்று நாயன்மார்களில் இறைவனை இசையால் பாடிய காரைக்காலம்மையார் வழுவாதிருந்தவர் என்பதை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## விருந்தோம்பலின் தனிச்சிறப்பு

வீட்டிற்கு வரும் விருந்தினரைப் பாதுகாத்தலும், உறவினரைப் பாதுகாத்தலும் குடும்பத் தலைவியின் பண்புகளாகும். என்பதை,

> “விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
> பிறவும் அன்னை கிழவோன் மாண்புகள்”
>
> (தொல்.1102)

என்ற தொல்காப்பியப் பாடல் அடிகளால் அறியமுடிகிறது.

இவ்வுலகில் நற்றமிழைச் சேர்ந்த புகழ் என்னவென்றால் பிறருக்கு அளிக்கும் விருந்தாகிய செயலைத் தம் உயிராக செய்வதாகும். இதை,

"நற்றமிழ் சேர்ந்த புகழ்
ஞாலத்தில் என்ன வெனில்
உற்ற விருந்தை
உயிரென- பெற்று உவத்தல்"

(குடும்ப விளக்கு, இரண்டாம் பகுதி)

பாரதிதாசனின் குடும்ப விளக்கு பாடலடிகள் தெரிவிக்கின்றன.

**விருந்தோம்பல் அதிகாரமும் காரைக்காலம்மையாரின் வழுவாமையும்**

விருந்தோம்பல் அதிகாரம் திருக்குறளில் 9ஆவது அதிகாரமாக உள்ளது. இவ்வதிகாரம் திருக்குறளில் அறத்துப்பாலில், இல்லறவியல் எனும் பகுதியில் இடம்பெற்றுள்ளது. தமிழ் மக்களின் தனித்தன்மையை இவ்வுலகிற்குப் பறைசாற்றுவதாக விருந்தோம்பல் உள்ளது.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் பெரும்பாலோர் தன்னை நாடி வரும் அடியார்க்கு விருந்தளித்தலையே பெரும்பேறாக செய்து மகிழந்தனர் என்பதை பெரியபுராணத்தின் வழி அறியமுடிகிறது. சிவனடியார்க்கு விருந்தளிக்கத் தன் மகனையே பிள்ளைக்கறியாக சமைத்துத் தந்த சிறுத்தொண்ட நாயனார் செயலும், வீட்டில் பொருளில்லாதபோது விதைத்த நெல்லை எடுத்து வந்து, விருந்தினருக்கு உணவாக்கிய இளையான்குடி நாயனாரின் செயலும் விருந்தோம்பலின் உச்சம் எனலாம்.

அவர்களைப் போலவே காரைக்காலம்மையார் என்றழைக்கப்படும் புனிதவதியாரும் சிவனடியார்க்கு செய்யும் விருந்தோம்பல் தொண்டினை சிவனுக்கே செய்யும் தொண்டாகக் கருதி வாழ்ந்து வந்தார். அதனால் தான் இறைவனே அவரை நாடி விருந்துண்ண அவரின் வீட்டிற்கு சிவனடியார் உருவில் வந்தார் என்பர்.

**1. விருந்தினர்க்குக் கொடுத்துவிட்டு தானுண்ணல் பண்பு**

விருந்தாக வந்தவர் வெளியே சென்றிருக்க, தான் மட்டும் உண்ணுதல், சாவைத் தடுக்கும் மருந்தே என்றாலும், விரும்பக்கூடியது அல்ல. என்பதை,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று." (குறள் - 82)

எனும் குறள் எடுத்துரைக்கிறது.

விருந்தினர்க்கு முதலில் உணவளித்து மிஞ்சியதை உண்டு வாழும் பண்பாளன், தன் நிலத்தில் விதை விதைக்கத் தேவையே இல்லை. என்பதை

“வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.” (குறள் - 85)

எனும் குறள் உணர்த்துகிறது.

மேற்காணும் குறட்பாக்களில் கூறப்பட்டது போலவே, காரைக்காலம்மையார் கணவனால் இல்லத்தில் வைப்பதற்காகக் கொடுக்கப்பட்டுத் தன்னிடமிருந்த நல்ல மணம் பொருந்திய மாங்கனிகளில் இரண்டில் ஒன்றைத் தனக்கென எண்ணாது, விருந்தினராகிய சிவனடியாருக்கு அமுது படைத்தார். என்பதை,

“இல்லாளன் வைக்கவெனத் தம்பக்கல் முன்னிருந்த
நல்லநறு மாங்கனிகள் இரண்டினில்ஒன் றைக்கொண்டு”

(பெரிய. காரைகாற். 20)

என்ற பெரியபுராணத்திலுள்ள காரைக்காலம்மையார் புராணப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

## 2. விருந்தினரைப் போற்றும் பண்பு

விருந்தினரைப் போற்றிப் பாதுகாப்பது இல்லறத்தின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். வீட்டில் இருந்து பொருள்களைப் பாதுகாத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்வதற்காகவே ஆகும். என்பதை,

“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.” (குறள் - 81)

என்ற குறளும்,

விருந்தோம்பலாகிய யாகத்தின் பயன் இந்த அளவுடையது என்று கூறத்தக்கதல்ல. அது விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவுடையதாகும். இதை,

“இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.” (குறள் - 87)

எனும் குறளும் புலப்படுத்துகின்றன.

இக்குறட்பாக்களுக்கு ஏற்ப, தன்னை நாடி வந்த சிவபெருமானின் மெய்யடியாரின் நிலையைக் கண்டு, ‘சிவபெருமானின் அடியவராகிய இவரின் பசியைத் தீர்ப்பேன்’ என்று சென்று, உணவைப் பரிமாறுவதற்கு காரைக்காலம்மையார் தயாரானார். என்பதை,

“வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலைகண்டு
நாதன்தன் அடியாரைப் பசிதீர்ப்பேன் எனநண்ணிப்”
(பெரிய. காரைகாற். 18)

என்ற பாடலடிகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு இல்லம் தேடி வந்த ‘விருந்தினரின் பசியைத் தீர்ப்பேன்’ என காரைக்காலம்மையார் தன் மனதில் உறுதி கொண்டது, விருந்தினரைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற அவரின் உன்னதப் பண்பைப் புலப்படுத்துகிறது.

### 3. வறுமைத் துன்பம் வந்ததில்லை

நாள்தோறும் தன்னை நாடி வரும் விருந்தினரைப் போற்றுகிறவனுடைய இல்வாழ்க்கை வறுமைத் துன்பத்தால் கெட்டுப் போவதில்லை. என்பதை,

“வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.” (குறள் - 83)

என்ற குறள் தெரிவிக்கிறது.

இக்குறட்பாக்களில் கூறப்பட்டது போல வறுமைத் துன்பம் அணுகாது, இல்லம் தேடி வருபவர்க்கு உள்ளவற்றை விருந்தளிக்கும் பண்பு கொண்டிருந்த புனிதவதியார், வணிகர் குலத்தில் பிறந்து செல்வ செழிப்புடன் இருந்தார் என்பதை பெரியபுராணம் தெரிவிக்கிறது.

### 4. விருந்தோம்பலின் பெரும்பேறு

வருகைபுரிந்த விருந்தினரைப் போற்றி, இனிவரவிருக்கும் விருந்தினரை எதிர் பார்த்திருப்பவன், வானுலகத்தில் உள்ள தேவர்க்கும் நல்ல விருந்தினன் ஆவான். இதை,

“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்வருந்து வானத் தவர்க்கு.” (குறள் - 86)

எனும் குறளும்,

பொருளைச் சேர்த்துவைத்து அதனை இழப்பவர், விருந்தோம்பல் எனும் வேள்விக்கு அது பயன்படுத்தப்படாமற் போயிற்றே என வருந்துவார்கள். இதை,

“பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். “ (குறள் - 88)

எனும் குறளும் புலப்படுத்துகின்றன.

இக்குறட்பாக்களின் பொருளுக்கேற்ப, ஆனேற்றையுடைய இறைவனின் அடியவரே தேடிப் பெறுதற்கரிய விருந்தாக இங்கு வருவாரானால், இதன் மேலும் பெறத்தக்கதொரு பேறு இல்லை எனும் எண்ணம் உடையவராய், அவ்வடியவருக்கு அமுது படைக்கக்கூடிய செயலை ஏற்றவராய் இருந்தார். என்பதை

“வெறிமலர்மேல் திருவனையார் விடையவன்தன் அடியாரே
பெறலரிய விருந்தானால் பேறிதன்மேல் இல்லையெனும்
அறிவினராய் அவரமுது செய்வதனுக் காதரிப்பார்.”

(பெரிய. காரைகாற். 19)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. காரைக்காலம்மையார் அனுதினமும் சிவனடியார் எவராயினும் தன் இல்லம் நாடி வரவேண்டும் என காத்திருக்கும் மனம் கொண்டிருந்தவர்.

**5. முகமலர்ச்சி**

முகமலர்ச்சியோடு நல்லமுறையில் விருந்தினரைப் பேணுகிறவன் வீட்டிலே, மனம் மகிழ்ந்து திருமகள் தங்கியிருப்பாள். இதை,

“அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.” (குறள் - 84)

எனும் குறளும்,

அதாவது அனிச்ச மலரை முகர்ந்தால் உடனே அது வாடிவிடக்கூடியது. அதைப்போல முகம் மலராது மாறுபடுதைப் பார்த்த உடனே விருந்தினரும் மனம் வாடிவிடுவார்களாம். இதை,

“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குநழ்யும் விருந்து.” (குறள் - 90)

எனும் குறளும் தெரிவிக்கின்றன.

மேலுள்ள குறட்பாக்களின் பொருட்களுக்கேற்ப, காரைக்காலம்மையார் மிக விரைந்து வந்து இலையில் படைத்து, அளவில்லா மகிழ்ச்சி பொங்க, வீட்டிற்கு வருகையுற்ற துன்பத்தைத் துடைத்தருளும் அடியவர்க்கு அமுது செய்வித்தார். என்பதை,

“வல்விரைந்து வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினால்
அல்லல்தீர்ப் பவர்அடியார் தமையமுது செய்வித்தார்.”

(பெரிய. காரைகாற். 20)

எனும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

## முடிவுரை

இவ்வாறாக, தமிழரின் மாண்புகளில் தலைசிறந்ததான விருந்தோம்பல் பண்பு பற்றி திருக்குறள் உரைத்த விருந்தினரைப் போற்றும் திறம், முகமலர்ச்சியுடன் விருந்தளிக்கும் நெறி, தனக்கு இல்லாவிடினும் விருந்தினருக்கு அளித்து மகிழும் உள்ளம் போன்ற நல்லறமாகிய மாண்புகளை காரைக்காலம்மையார் தம் இல்லற வாழ்வில் உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்திருந்தார் என்பதனை அறியமுடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. அண்ணாமலை. க. ப., (1987), திருக்குறள் சிந்தனை, வானதி பதிப்பகம், சென்னை.
2. செல்வராசு. சிலம்பு. நா., (2023), காரைக்கால் அம்மையார் தொன்மம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில்.
3. சேக்கிழார், (1954), பெரியபுராணம் (உரையுடன்), கோவைத் தமிழ்ச் சங்கம், கோயம்புத்தூர்.
4. திருவள்ளுவர், (1924) திருக்குறள், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
5. பாரதிதாசன், (1948), குடும்ப விளக்கு – இரண்டாம் பகுதி (விருந்தோம்பல்), செந்தமிழ் நிலையம், திருச்சி.
6. முனிசாமி .வீ. (1988), திருக்குறள் அதிகார விளக்கம், வானதி பதிப்பகம், சென்னை.

- விசுவநாதம். கி. ஆ. பெ. (1987), திருக்குறள் கட்டுரைகள், பாரி நிலையம், சென்னை.,

**License**

Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.